# காந்தி எத்தனை காந்தி!




கபான் (வட மத்திய ஆப்ரிக்கா) | காங்கோ (மத்திய ஆப்ரிக்கா) | ஈரான் | பனாமா | செனகல் (வட ஆப்ரிக்கா) | அன்டிகுவா & பர்புதா




க்ரீஸ் | சூரினாம் (தென் அமெரிக்கா) | டிஜிபுதி (வடகிழக்கு ஆப்ரிக்கா) | மால்டா தீவு | மாலவி | மெக்ஸிகோ




சிலி (தென் அமெரிக்கா) | ஸ்ரீலங்கா | மொரீஷியஸ் | ஜெர்மனி (வட மத்திய ஐரோப்பா) | ஹங்கேரி (மத்திய ஐரோப்பா) | காங்கோ




பூட்டான் | அமெரிக்கா | ஐக்கிய நாடுகள் சபை | யூனியன் ஆஃப் சோவியத் சோசலிஸ்ட் ரிபப்ளிக் | சிரியா | செயிண்ட். தாமஸ் (பிரின்ஸ் ஐலேண்ட்)




ஸ்டப்பா (ஸ்காட்லாந்து) | கஜகஸ்தான் (சோவியத் யூனியன்) | நிகரகோ (மத்திய அமெரிக்கா) | கோமரோஸ் (தென் ஆப்ரிக்கா)




கிரேட் பிரிட்டன் | சன் மரினோ (மத்திய இத்தாலி) | பர்கினா பசா (வட ஆப்ரிக்கா) | உருகுவே (வட அமெரிக்கா) | ஏமென் (தெற்கு)



▪ கல்யாண்குமார்


ராஜேஷ்

பள்ளிக்கூடத்தில் ஆறாவது படிக்கும்போது ஆரம்பித்த ஸ்டாம்ப் கலெக்‌ஷன் பழக்கத்தை, இன்றைக்கும் விடாப்பிடியாகத் தொடர்கிறார் ராஜேஷ். அதுவும் மகாத்மா காந்தி மீது இவருக்கு இருக்கும் மரியாதையால் இதுவரைக்கும் வெளிவந்த அத்தனை காந்தி ஸ்டாம்ப்கள், அரிய புகைப்படங்கள், புத்தகங்கள், அவரைப் பற்றிய பேப்பர் கட்டிங்ஸ், அவர் உருவம் பொறித்த டோக்கன்கள், காயின்கள், ரூபாய் நோட்டுகள், அவரது கையெழுத்துகள் என்று இந்த கலெக்‌ஷனுக்காக மட்டும் இவர் செலவிட்டிருக்கும் தொகை சுமார் ஐந்து லட்சத்தைத் தாண்டுகிறது. இத்தனைக்கும் கும்மிடிப்பூண்டியில் இயங்கும் மத்திய அரசின் பெட்ரோலிய நிறுவனத்தின் கணக்குப்பிரிவு ஊழியராக இருக்கும் ராஜேஷ், இதற்காக அலுவலகத்திலும் வங்கியிலும் லோன் வாங்கித்தான் இதைச் செய்வதாகச் சொல்கிறார்.

''இந்தியாவில் மட்டும் 42 வகையான காந்தி உருவம் பொறித்த ஸ்டாம்ப்கள் வெளிவந்திருக்கின்றன. இதுதவிர சுமார் 120 நாடுகளில் காந்திக்காக ஸ்டாம்ப் வெளியிட்டு அவரை கௌரவப்படுத்தியிருக்கின்றன. இது வேறு எந்தத் தேசத் தலைவருக்கும் கிடைக்காத பெருமை''

## உலகில் 120 நாடுகள் காந்திக்கு தபால் தலை வெளியிட்டுள்ளன

என்ற தகவலோடு அத்தனை காந்தி ஸ்டாம்ப்களையும் ஆர்வமாய் காட்டுகிறார் ராஜேஷ் (எதிர்ப்பக்கத்தில் இருக்கும் சில வெளிநாட்டு ஸ்டாம்ப்கள் இவர் சேகரித்தவைதான்).

இந்தியாவில் 1948ஆம் வருடம்தான் காந்தியின் உருவத்தோடு கூடிய ஸ்டாம்ப் முதன் முதலாக வெளியிடப்பட்டது. அதன் பிறகு வெளிநாடுகளில் முதன்முதலாக 1961இல் அமெரிக்காதான் காந்திக்கு ஸ்டாம்ப் வெளியிட்டு கௌரவப்படுத்தியிருக்கிறது. அதன்பிறகுதான் மற்ற நாடுகளும் காந்தி ஸ்டாம்ப்களை வெளியிட்டிருக்கின்றன.

இதில் இந்தியா வெளியிட்ட முதல் ஸ்டாம்ப்பை பனிரெண்டாயிரம் ரூபாய் கொடுத்து வாங்கியிருக்கிறார் ராஜேஷ். அதேபோல பிரபல ஓவியர் பிகாசா வரைந்த காந்தி ஓவியத்தை செயிண்ட் தாமஸ் பிரின்ஸ் ஐலேண்ட் என்ற ஒரு குட்டி நாடு வெளியிட்டிருக்கிறது. அதை நீண்ட வருடங்கள் முயற்சித்து, போனவருடம்தான் கொல்கத்தா போய் பத்தாயிரம் ரூபாய் கொடுத்து வாங்கியதாகத் தெரிவிக்கிறார் ராஜேஷ்.

காந்தியின் தபால் தலைகளை மட்டுமல்ல, காந்தி படம் இடம் பெற்ற வேறு பலவற்றையும் சேகரித்து வருகிறார் ராஜேஷ். காந்தியின் பிறந்த நாளைக் குறிக்கும் 2. 10.1869 என்ற வரிசை எண்களைக் கொண்ட ஒரு ரூபாய் நோட்டிலிருந்து ஆயிரம் ரூபாய் நோட்டு வரைக்குமான இவரது காஸ்ட்லியான கலெக்‌ஷனிலும் காந்தி அழகாய் சிரிக்கிறார். இதுதவிர நமது சுதந்திர தினமான 15.08.1947 என்ற எண், குடியரசு தினமான 26.01.1950 ஆகிய எண்கள் அடங்கிய நோட்டுகளும் இதில் அடக்கம்.

'இத்தாலியிலும் இங்கிலாந்திலும்கூட டெலிபோன் கார்டுகளில் காந்தி படத்தை வெளியிட்டு கௌரவப்படுத்தி இருப்பதுபோல இந்தியாவிலும் தொலை தொடர்புத் துறை வெளியிடும் கார்டுகளில் சினிமா நட்சத்திரங்களின் படங்களைத் தவிர்த்துவிட்டு காந்தி உருவத்தைப் பொறிக்க வேண்டும்' என்று மத்திய அரசிடம் மிக சீரியஸாக ஒரு வேண்டுகோளை வைக்கிறார் இந்த காந்திதாசன்.

***(ராஜேஷின் ஸ்டாம்ப் கலெக்‌ஷன்கள் குறித்த தொடர்புகளுக்கு: 9444019030.)*** ■